**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் :12.06.2026**

**வழக்கு எண் : OP.25/2023**

**சாட்சி பெயர் : திருமதி.சண்முகவள்ளி /PW.2**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு இரண்டு மகன்கள், ஒருவர் ஆறுமுகபெருமாள் என்ற மனுதாரர், மற்றொருவர் பேச்சிமுத்து. பேச்சிமுத்து எனது மூத்தமகன், அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. மனுதாரருக்கு திருமணமாகி அவரது மனைவியுடன் கூட்டுகுடும்பமாக இருந்தோம். அப்பொழுது என் மூத்தமகனும், மனைவியும் எங்களுடன்தான் இருந்தார்கள் என்றால் இல்லை, அவர்கள் தனிக்குடித்தனம் இருந்தார்கள். திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் எங்களுடன் எவ்வளவு நாட்கள் கூட்டாக வசித்து வந்தார்கள் என்றால் 3 மாதம் வரை வசித்து வந்தார்கள். 01.05.2021ம் தேதியில் எதிர்மனுதாரர் அவரது தகப்பனார் வீட்டிற்கு சென்றுவிட்டார். எனது மூத்தமருமகள்தான் அப்பொழுது எதிர்மனுதாரரை அவரது தகப்பனார் வீட்டில் கொண்டு விட்டு வந்தார் என்றால் ஞாபகமில்லை. 01.05.2021ம் தேதியில் எதிர்மனுதாரர் அவரது தகப்பனார் வீட்டிற்கு செல்லும் 6 மாதம் கர்ப்பமாக இருந்தார் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 23.11.2021ம் தேதியில் ஆண்குழந்தை பிறந்தது என்றால் சரிதான். திருமணமாகி 10 மாதத்தில் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். என்னுடைய மகள் ஏ.வி.எம் மருத்துவமனையில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனது மகனுடன் சேர்ந்து வாழ்வதற்கு இப்பொழுதும் தயாராக இருக்கிறார் என்றால் அது அவர்களது விருப்பம். மனுதாரரை , எதிர்மனுதாரரை அடித்து துன்புறுத்தியதாக சொல்லியுள்ளேன், அது பக்கத்துவீடு, எதிர்வீட்டுக்காரர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர்கள் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் சாட்சி சொல்பவர்களையும் ஏசுவார்கள். எதிர்மனுதாரர் பிரச்சையா, அவரது தகப்பனார் பிரச்சனையா என்றால் இருவருமே பிரச்சனைதான். எதிர்மனுதாரர் தகப்பனாரும், நானும் ஒரே வகுப்பில் படித்தவர்கள்தான். எதிர்மனுதாரர் தாயார் எனக்கு உறவினர்தான். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் பெற்றோர்களை எனக்கு நன்கு தெரியும். எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ள விபரம் ஊர் பெரியவர்களிடம் கேட்டால் தெரியும் என்றால் சரிதான். நாராயணன்,

பிள்ளைவிநாயகம் ஆகியோர் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினார்கள். எனது பேரன் பிறந்தபொழுது நான் போய் பார்த்தேனா என்றால் இல்லை, எனது மகன்போய் பார்த்துவந்தார். ஊர் பெரியவர்கள் எதிர்மனுதாரரிடம் சமாதானம் பேசும்பொழுது எதிர்மனுதாரர் வர மறுத்துவிட்டதாக நான் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல, சேர்ந்துவாழ வந்தபிறகு பிரச்சனை செய்தார். எந்தவருடம் சேர்ந்துவாழ வந்தார் என்றால் ஞாபமில்லை. அதன்பிறகு ஊர்பெரியவர்களிடம் சொன்னேனா என்றால் எல்லாரும் சத்தம்போட்டார்கள். எங்கள் வீட்டிற்கு எதிர்மனுதாரர் திரும்ப வாழ வந்தபொழுது பத்திரம் கையொப்பம் செய்ய சொல்லி கேட்டோம் என்றால் இரண்டுபேரும் கையொப்பம் செய்வதாக சொன்னோம், அவரும் சரி என்று சொல்லிவந்தார்கள். எதிர்மனுதாரருக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான், அதனால் எதிர்மனுதாரர் சகோதரி மகேஷ்வரி படித்துபார்த்தார் என்றால் சரிதான். பத்திரத்தில் கையெழுத்து வாங்கும்பொழுது எங்கள் தரப்பில் ஒரு வழக்கறிஞர் இருந்தார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எதிர்மனுதாரர் விவகாரத்து கொடுக்க சம்மதிக்க வேண்டும் என எழுதியிருந்ததால் அவர் கையொப்பம் செய்ய மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த பத்திரம் தற்சமயம் என்வசம் உள்ளது என்றால் ஞாபகமில்லை. என் மகன் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் மீது ஏரல் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் வழகககு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிர்மனுதாரர் தகப்பனார் எங்கள் மீதும், என் பையன் மீதும் கொடுத்த புகார் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும், எனது மகனும், எதிர்மனுதாரரை அடித்து துன்புறுத்தியததால் எதிர்மனுதாரர் தகப்பனார் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 01.05.2021க்குபிறகு என் மகன், எதிர்மனுதாரருக்கு அவரது குழந்தைக்கோ பராமரிப்பு செலவு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் சமுதாய வழக்கப்படி பெண்கள் வீட்டில்போய் ஆண் வசிப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு ஆண்குழந்தைகள் இருப்பதால் நான் குடியிருக்கும்வீட்டை எனது இளைய மகனுக்கு கொடுத்துவிட்டேன். மூத்தமகன் எனக்கு சொந்தமான இடத்தில் வீடுகட்டி குடியிருக்கிறார் என்றால் சரியல்ல, எனது கணவருடைய மனையில் வீடுகட்டி குடியிருக்கிறார். என் கணவருக்கு பாளையங்கோட்டை பெருமாள்புரத்தில் வீடு உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. எங்களது சொந்தமான சொத்துகளை பொறுத்து பாகப்பிரிவினை நடைபெறவில்லை

என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து எங்களுக்கு சீதனமாக வீடு கொடுக்கவில்லை, நகை கொடுக்கவில்லை அவரை துன்புறுத்தி கொடுமை படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தன்னுடைய கடமைகளை மனுதாரருக்கு சரிவர செய்துவந்தார் என்றால் இல்லை. நான் சொன்னமாதிரி எதிர்மனுதாரர் அவரது தந்தை வீட்டிற்கு சென்றது இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தகப்பனார் கூலிபடை வைத்து கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாக சொல்வது மனுவிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்த கொடுமையும் செய்யவில்லை என்றும், நாங்கள்தான் எதிர்மனுதாரருக்கு வீடு மற்றும் நகைகள் கேட்டு கொடுமை செய்தோம் என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**